# சூரியவெவ பிரதேச சபை
# அம்பாந்தோட்டை மாவட்டம்

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 22 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 15 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3.2 மற்றும் 1.3.6 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்தவத்தின் காரணமாக சூரியவெவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார வரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வாடகை ஆகிய கணக்குகளின் பெறுமதி ரூபா 100,800 மற்றும் திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 63,707 குறைத்து ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் பிணை வைப்புக்கள் பொறுப்புக் கணக்கிலான ரூபா 629,356 ஆன மீதி, பிணை வைப்பு வட்டிக் கணக்கிலான ரூபா 158,661 ஆன மீதி மற்றும் தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து கூடுதலாக மீள் நிரப்பப்பட்டிருந்த ரூபா 1,560 ஆன மீதி மற்றும் 4 வருமானக் கணக்குகளுக்கும் செலவின விடயமொன்றிற்குரிய ரூபா 254,958 கூட்டுத்தொகையான பெறுமதி என்பன நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 3,086,732 ஆன மூலதனச் செலவினம் மற்றும் ரூபா 2,728,135 ஆன மூலதன வருமானம் மீளாய்வாண்டின் வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊழியர் பிணை வைப்பு வட்டிக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 75,287 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மோட்டர் கிரேடரொன்று கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகையில் ஆண்டின் இறுதியிலான ரூபா 1,900,000 ஆன நிலுவை மீதி கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 8 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய புத்தகங்கள் மற்றும் பட்டோலைகளில் காண்பிக்கப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 1,122,164 ஆன சமனின்மை அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நிர்மாண வேலை மானியங்களின் பெறுமதி ரூபா 11,442,346 ஆக இருந்ததுடன், அதற்கு முன்னைய ஆண்டிற்குரிய பெறவேண்டிய ரூபா 2,728,137 ஆன மீதியும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

முன்னைய ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த 8 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 3,246,391 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 5,974,528 தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வும் ரூபா 68,548 தொகையான ஆசிய மன்றத்தின் கணக்கிற்கும் நீர் பாவனையாளர் குழுக் கணக்கிற்குரிய மீதி உறுதிப்படுத்தல்களும், ரூபா 4,494,734 கூட்டுத்தொகையான நிர்மாண வேலைக் கடன்பட்டோர், வருமானக் கடன்பட்டோர், பாதுகாப்பு பிணை வைப்புக்கள், நிறுத்தி வைத்தல்கள், கேள்வி வைப்புக்கள் மற்றும் வெவ்வேறு வைப்புக்கள் போன்ற கணக்குகளில் இணக்கமின்மைகளை அகற்றுவதற்குரிய விரிவான பட்டோலைகளும், கெப் வண்டியொன்றைப் புதுப்பிப்பதற்காக செலுத்தப்பட்ட ரூபா 455,340 இற்குரிய கிடைத்த விலை விபரங்கள் மற்றும் கேள்விச் சபைத் தீர்மானமும் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரீட்சித்து உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 மே 21 ஆந் திகதிய 15/நானாவித (051) ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | தொடர்புடைய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டு விழாவிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 150,465 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 03 ஆண்டுகளுக்கு மேல் காலாவதியான ரூபா 86,875 ஆன ஐந்து பாதுகாப்பு பிணை வைப்பு மீதிகளைத் தீர்வுசெய்வது தொடர்பாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 471,652 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,026,432 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,498,084 ஆன வீழ்ச்சியொன்று தென்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது ஒவ்வொரு ஆண்டிலும் சுய வருமான உழைப்பு உட்பட வருமான மானியங்களில் அதிகரிப்பொன்று காணப்பட்ட போதும் மீண்டெழும் செலவினங்கள் தொடர்ச்சியாக அதிகரிக்கும் வேகத்தில் கருத்திற் கொள்ளக்கூடிய பெறுமானத்தில் அதிகரித்திருந்தது.

(ஆ) சபையின் சுய வருமானமீட்டல் அளவை விஞ்சி மீளாய்வாண்டு உட்பட முன்னைய இரண்டு ஆண்டுகளில் மீண்டெழும் செலவினங்களில் கருத்திற் கொள்ளக்கூடிய அதிகரிப்பொன்று காண்பிக்காமல் இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 23,830,568 ஆன சுய வருமான உழைப்பில் இரண்டு மடங்கினை மிகைத்திருந்தது.

(இ) வருமான மானியம் கிடைக்கப்பெறாத எந்தவொரு முறையிலும் சபை வருமானங்களிலிருந்து மீண்டெழும் செலவினத்தை மேவுகை செய்ய முடியாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 23,696,639 தொகையான மொத்த மீண்டெழும் வருமானத்தை மிகைத்து செலவினம் காணப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 ஆதன வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 வாடகை**

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வாராந்த சந்தை வாடகைக்கு விடல்

(i) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 177 இன் பிரகாரம் சூரியவெவ மற்றும் வெனிவெல்ஆர வாராந்த சந்தைகள் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் தரகுப் பணத்தின் அடிப்படையில் சபையினால் வரி சேகரிப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ii) சூரியவெவ வாராந்த சந்தைக்காக ரூபா 2,066,123 தொகையும் வெனிவெல்ஆர வாராந்த சந்தைக்காக ரூபா 88,514 ஆன தரகுப்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வாராந்த சந்தைகள் கேள்வி கோரப்பட்டு வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின் செலுத்தப்பட்ட தரகுப் பணத்தை சேகரிக்க முடியுமாக இருந்திருக்கும்

(ஆ) வருமானக் கைவிடலுக்காக அங்கீகாரம் பெறப்படாமை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிலுவைக் வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குரிய 41 கடைகளுக்கான வாடகை மற்றும் தாமதக் கட்டணங்களாக முறையே ரூபா 797,300 தொகையும் ரூபா 79,555 தொகையுமாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) ஒரே தடவையில் சேகரிக்கும் பணம் அறவிடப்படாமை

(i) 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே தடவையில் சேகரிக்கும் பணத்தை அறவிடப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 429,769 ஆன நிலுவை தொகையொன்று காணப்பட்டது.

(ii) நிலுவை மீதிகளுக்கு நீண்டகாலமாக சேரும் பணத்தை செலுத்தப்படாத நான்கு கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 142,726 ஆக இருந்த போதிலும், அக்கடைகளை கையேற்பதற்கோ அல்லது அப்பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 நீர்க் கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதியில் 310 நீர் பாவனையாளர்களடமிருந்து ரூபா 157,032 ஆன நீர்ப் பட்டியல் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணமாக ரூபா 1,074,187 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 126,500 எனக் கிடைக்க வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல் மதிப்பீடு

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட அபிவருத்தி முன்மொழிவுகள் மற்றும் உறுப்பினர் முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், அதன் முன்மொழிவுகள் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட மூலதன வருமானம் ரூபா 26,500,000 தொகையாக இருந்ததுடன், மூலதனச் செலவினம் ரூபா 28,000,000 ஆக இருந்தது. எவ்வாறாயினும் மூலதன வருமானம் கிடைக்கப்பெறும் வழிகள் மற்றும் மூலதனச் செலவினத்தின் கீழ் செயற்படுத்தப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் விபரங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 126 செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் பாதீட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10,189,200 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளில் ஆண்டின் இறுதி வரையிலும் எவ்வித செலவிமொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

2014 தென் மாகாண அபிவிருத்தி திட்டத்தில் உறுப்பினர் நிதிஏற்பாட்டின் கீழ் சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளிக்காக உபகரணங்களை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையில் ரூபா 25,200 நோக்கத்திற்கு புறம்பான முன்பள்ளி பாடசாலை மாணவர்களுடன் நிழற்படங்களை எடுப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டிற்காக ஆறு சந்தர்ப்பங்களில் மூன்று நிறுவனங்களிடமிருந்து விலை கோரல் கோரப்பட்டு ரூபா 194,950 செலவிடப்பட்டு 15 டயர்களும் 4 டியுப்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்த மூன்று நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தினால் 2015 ஆம் ஆண்டில் விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்படவில்லையெனவும் அந்நிறுவனத்தின் பெயர் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையுடன் கூடிய விலை விபரங்கள் போலியானதென சபைக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 3.4 இனங்காணப்பட்ட நட்டம்

உத்தேச கூட்டுப்பசளை செயற்திட்டத்தின் வலை வேலி நிர்மாணத்திற்காக ரூபா 1,065,900 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்களின் பகுதியொன்று காணாமல் போயிருந்தது. அரசின் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் 2013 யூலை 09 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையில் பரிந்துரையின் பிரகாரம் ரூபா 101,500 தொகையான காணாமல் போன பொருட்களின் மீள்கொள்வனவுக் கிரயத்தை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டு வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 பதவியணியினர் நிர்வாகம்**

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 13 ஊழியர்கள் மிகையாக காணப்பட்ட போதிலும், அப்பதவிகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட சுகாதார தொழிலாளர்களின் எண்ணிக்கையை மிகைத்து 4 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், அதில் மூன்று பேருக்கு அரச முகாமைத்துவ உதவியாளர், சாரதி மற்றும் நூலக உதவியாளர் ஆகிய பதவிகளில் சேவைக்காக இணைக்கப்பட்டிருந்தனர்.

(இ) சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட கள வேலை தொழிலாளர்கள் 09 பேரில் மூன்று பேர் மாத்திரம் அக்கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டு எஞ்சிய அரச முகாமைத்துவ உதவியாளர், காவல் பிரிவிலும் மின்சாரப் பிரிவலும் வரவேற்பு உத்தியோகத்தர் ஆகிய பதவிகளில் சேவையில் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) வீதிப் பிரிவின் தொழிலாளர்களை ஏனைய வேலைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படமையால் அந்நடவடிக்கைகளுக்காக வெளிவாரி தொழிலாளர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டில் ஐந்து சந்தர்ப்பங்களில் ரூபா 191,400 தொகை தொழிலாளர் கூலியாக கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

**3.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஏ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் அமைச்சரின் எழுத்துமூல முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் பிரதேச அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 04 விஹாரைகளுக்கும் 05 முன் பள்ளிகளுக்கும் சீமெந்து மற்றும் உபகரணங்கள் வழங்குவதற்காக 5 சந்தர்ப்பங்களின் போது ரூபா 209,585 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த செலவின விடயமொன்றில் முழு நிதிஏற்பாட்டையும் மேலும் 07 செலவின விடயங்களில் ரூபா 30,147,722 தொகையான சேமிப்புக்களும் வேறு 02 செலவினங்களில் எல்லையை விஞ்சி ரூபா 5,827,897 ஆன செலவினங்களும் 04 வருமான விடயங்களில் அடையப் பெறாத ரூபா 22,517,703 ஆன இலக்கும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தென் மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் தபபா/யஹ/01/ந.சு.லே. ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது. கணக்காய்வு திட்டம் மற்றும் கணக்காய்வ அறிக்கைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 134(2) மற்றும் (3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினைச் செயற்படுத்தல்

2009 யூன் 09 ஆந் திகதி DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) கையேற்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் எட்டுக் காணிகளின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வின் போது வீரியகம மற்றும் சூரியவெவ ஆகிய நூலகங்களில் ரூபா 82,295 பெறுமதியான 436 புத்தகங்கள் பற்றாக்குறையென அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்வு செய்யப்படாத பொறுப்புக்கள்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 12,595,028 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 3,151,718 தொகையான பொறுப்புக்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்